INTERNATIONAL JOURNAL OF ZIZEK STUDIES

**ISSN 1751-8229**

தொகுதி 1 எண் 1 - ஏன் ஜீஷெக் ஏன் இப்பொழுது?

# ஏன் ஜீஷெக்? ஏன் இப்பொழுது?

**முனைவர்.பால்.அ.டெய்லர்**
**தொடர்பியல் கல்வி நிறுவனம், லீட்ஸ் பல்கலைக் கழகம்**

**தமிழாக்கம்: கோபாலன் இரவீந்திரன்**

## முன்னுரை

பன்னாட்டு ஜீஷெக் ஆராய்ச்சி இதழ் ஜீஷெக் பற்றிய பரவலான கருத்துக்களுக்கும் துறை சார்ந்த அணுகுமுறைகளுக்குமான ஒரு ஆராய்ச்சி தளம். சுலோவேனியரான ஜீஷெக் ஒரு அறிவார்ந்த தத்துவ அறிஞரும் பண்பாட்டு கோட்பாட்டாளரும் ஆவார். இவர் மற்றவர்களால் அறிய முடியாத அளவில் ஜெர்மனிய லட்சியவாத தத்துவத்தையும், லக்கானிய உளவாய்வு பகுப்பியல் கோட்பாட்டையும், பரந்து விரிந்த அளவிலும், தீர்க்கமான பார்வையுடனும், நம்மை கேள்வி எழுப்பும் வகையிலும் பண்பாட்டு அரசியல் தலைப்புக்களை அணுகியவர். (இவரது விரிவான பார்வையை தெரிந்து கொள்ள தகவல் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஜீஷெக் சம்பந்தமான இணைய தரவுகளின் விவரத்தை பார்க்கவும்). இந்த இதழை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கெர்ரி கோல்டர் (பிசப் பல்கலைக் கழகம், கனடா) ஆசிரியராக இருக்கும் *பன்னாட்டு பொதிர்லா ஆராய்ச்சி இதழை* பார்த்தவுடன் உதிர்த்தது. இந்த இதழ் தீவிர சிந்தனையாளர்களை பற்றி ஆய்வு செய்யும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு சரியான தீர்வை சொல்லுகிறது. அவர்களது பழமையான அணுகுமுறையிலிருந்து விடுபட்டு, நிதர்சனமறிந்து, அவர்கள் செய்யும் ஆய்வுகளை பரவலாக்கும் வழியை சொல்லுகிறது. பன்னாட்டு ஜீஷெக் ஆராய்ச்சி இதழின் இணைய வடிவம் ஜீஷெக்கின் பங்களிப்பிற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது (டேவிட் கன்கலின் ”ஏன் ஜீஷெக், எதற்காக இணையத்தில்?” தொகுப்பு 1 இதழ் 1 உள்ள கட்டுரையைப் பார்க்கவும்). இந்த இதழ் ஜீஷெக்கின் அறிவார்ந்த சிந்தனையைப் பற்றிய ஆராய்ச்சி விவாதங்களுக்கு உதவும் வகையிலும்

வெகுஜன ஊடகங்களின் மழுங்கடிக்கும் முயற்சியை தவிர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது.

ஜீஷெக்கின் ஒழுங்கற்ற ஆனால் நட்பு பாராட்டும் அணுகுமுறை அவரை வெகுஜன ஊடகங்கள் தேர்ந்தெடுக்கும் பேச்சாளர்களை விட மிகவும் வெற்றிகரமான பேச்சாளராய் ஆக்கியிருக்கிறது. ஜீஷெக்கை வெகுஜன ஊடகங்கள் ஒரு கேலிச்சித்திரமாக (ஒரு பாதி ரஸ்புதினாகவும் மறுபாதி கிரௌசோ மார்க்ஸ் ஆகவும்) பார்க்க துடிக்கும் தேவை ஒருவிதமான கவனச்சிதறலுக்கு துணை போகும் யுத்தியாகும். வெகுஜன பண்பாட்டின் நேரிடையான மற்றும் மறைமுகமான கொள்கைகள் பற்றியும் அவற்றின் எதிர்கொள்ளப்படாத ஆதாரங்களின் நிலைப்பாட்டை குலைக்கும் அளவிலும் ஜீஷெக்கின் செயலாக்கம் இருப்பதினால், வெகுஜன ஊடகங்களுக்கு அத்தகைய கவனச்சிதறல் தேவைப்படுகிறது. வீரியமான கருத்தாக்கத்திற்காக ஜீஷெக் மதிக்கப்பட்டாலும், அவரது அடக்கப்பட முடியாத கோட்பாடு ஒருவித சோர்விலிருந்து மீளும் பாதிப்புக்கு உள்ளாகும் விடயமாகும். பொதிர்லா தீவிர சிந்தனையின் உயிர்ப்புத் தன்மையை சாகடிக்கும் விடயத்தை 'உயிரைப்பறிக்கும் அளவிலான விளம்பரம்' என்று குறிப்பிடுகிறார். *ஜீஷெக்!* என்ற திரைப்படத்தில் ஜீஷெக் ஒத்துக்கொள்வது பின்வருமாறு:''எனது பெரிய கவலை என்னவென்றால் நான் ஒதுக்கப்படக்கூடாது, மாறாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்''. வெகுஜன ஊடகங்களின் விளம்பர பார்வையில் இவ்வாறு தான் ஜீஷெக் கயிற்றின் மேல் நடக்கிறார். அவரது படைப்புக்கள் தீவிர கவனத்தை ஈர்த்தாலும், அவற்றின் முழுமையான மற்றும் சிக்கலான சிந்தனை விளம்பர வெளிச்சத்தில் மறையும் அபாயம் உள்ளது.

*Crisis in Cultureஇல்* அன்னா அர்ன்ட் ஞாபகம் வைத்துக் கொள்ளும் அளவில் கூறியது:''கடந்த காலத்தில் தலைச்சிறந்த பல படைப்பாளிகள் பல நூற்றாண்டு கால ஒதுக்குதலை மீறி உயிர்ப்புடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்களால் தற்காலத்திய பொழுதுபோக்கான பாங்கில் செயல்பட்டு உயிர்ப்புடன் இருக்க முடியுமா என்பது கேள்வி.''*ஜீஷெக!*இல் ஜீஷெக் யுகிப்பது, ''என்னை பிரசித்தமாக்குவது என்பது என்னை தீவிர கவனத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்பான ஒன்று என்று சொல்ல நினைக்கிறேன்''. பல நகைச்சுவையான விடயங்களை கையாளும் ஒரு சிந்தனையாளர் இவ்வாறு கூறுவது சில வாசகர்களுக்கு போலித்தனமாக தோன்றலாம். ஆனால் ஃபாலார் மற்றும் மெக்கோவான் தொகுப்பு 1 இதழ் 1 இல் கூறுவது போல், ஜீஷெக்கின் நகைச்சுவை தன்மை ஒரு முக்கியமான இலக்கிற்கான வழிவகைதான். மேலும், முரண்பாடாக, அவரை குற்றம் சாட்டுபவர்களின் சிரிக்க இயலாத தன்மையை சுட்டிக்காட்டுவதாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

> தீவிர கவனிப்பு இல்லாமல், கோட்பாடு என்பது ஆதிக்க கருத்தியலின் மோசமான மனச்சாட்சிதான். அது கேள்விகளை எழுப்பும், ஆனால் உண்மையை அணுகாது. தீவிர கவனம் கொண்ட கோட்பாடுதான் நாம் அறிந்து கொள்ளாமல் இருக்கும் உண்மையை அங்கிகரிக்க

> அனுமதிக்கும். கோட்பாட்டு கவனத்தில்தான் அறிவை சார்ந்து, உண்மையைத்தேடும் பாங்கை விடுத்து, நாம் இருத்தலை தீர்மானிக்கும் அறிவு சாராத விடயங்களைக் கொண்டு, உண்மையை தழுவ வாய்ப்பு உள்ளது. ஆனால் முதலில் நாம் அங்கிகரிக்க வேண்டியது தீவிர கவனத்திற்கான பாதை சிரிப்பை தூண்டும் விடயங்களால் நிரப்பப்பட்டுள்ளது என்பதை அங்கிகரிக்க வேண்டும். (மெக்கோவான், *பஜீஆஇ* தொகுதி 1 இதழ் 1:66)

பன்னாட்டு ஜீஷெக் ஆராய்ச்சி இதழின் முக்கிய அம்சம் ஜீஷெக்கின் அறிவுஜீவித்தனமான தகுதிகளை ஏற்று கொள்வது. அவரது இன்பத் துய்த்தலை மதியிழந்து மறுக்காமல்! ஜீஷெக் அவரது கழிவறை தன்மை கொண்ட நகைச்சுவையான அணுகுமுறையினாலும், கழிவு தோற்றம் கொண்ட ஆய்வுகளினாலும், அடிக்கடி தோன்றும் சந்தேக புத்தியினாலும், நாகரீகமான வடிவம் கொண்டு இயங்கும் பல அறிவுஜீவி கூட்டங்களில் வெறுக்கப்படுகிறார். அவர் சொல்ல கூடாததை சொல்ல மறுப்பதால், மற்ற சிந்தனையாளர்களின் ‘‘அழகான ஆன்மாக்கள்’’ என்ற தாக்கத்தை ஒதுக்க நினைக்கிறார்கள். புனித பவுல் மற்றும் லெனின் போன்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த வேறுபட்ட ஆளுமைகள் கொண்ட இந்த உலகத்தில் அவர் நிலையான தீர்மானத்துடனும், ஆர்வத்துடனும் இயங்குவதன் முழு விளைவுகளிலிருந்து ஒதுங்கி நிற்கவில்லை.

### ஜீஷெக்கின் பைத்திய நிலையின் முறை

> எல்லாவித யதார்த்தங்களுடனான கோட்பாட்டு பரிச்சயம் (அந்த யதார்த்தங்கள் கல்விசார் ஆராய்ச்சி உலகத்திற்கு வெகு தூரம் இருந்தாலும்), ஜீஷெக்கின் ஒரு உன்னதமான கோட்பாட்டு செயலாக்கத்திற்கு வழி வகுக்கிறது. பெரும்பாலான பார்வையாளர்கள் கூறுவது போல, அதிக பன்முகப்பட்ட யதார்த்தங்கள் ஜீஷெக்கின் கோட்பாட்டில் இடம் பிடிக்கின்றன. ’’*Matrix*’’இல் இருந்து மார்க்ஸ் வரை, ஒரு கெட்ட சிரிப்புட்டும் அர்த்ததிலிருந்து மற்றொரு கெட்ட சிரிப்புட்டும் அர்த்தம் வரை, கைமைதுானத்திலிருந்து ப்ளின்ட்ஸ்டோன் வரை, *சிஐஏ*இன் சித்திரவதை முதல் குழந்தைகளின் விளையாட்டு பொருட்கள் வரை, கோகோகோலா விளம்பரங்கள் முதல் கம்யுனிசக் கட்சியின் ரகசியங்கள் வரை: எதுவும் உயர்ந்ததோ அல்லது தாழ்ந்ததோ கிடையாது, ஜீஷெக்கின் தத்துவ வரம்பிலிருந்து வெளியே நிற்க. ஜீஷெக்கின் அணுகுமுறையில் அது ஒரு பெரிய சமத்துவ சூழலை உருவாக்குகிறது. ( ∴பாலார், *பஜீஆஇ* தொகுதி 1 இதழ் 1:43)

பண்பாட்டு கோட்பாட்டில் இருக்கும் சில கோழைத்தனமான அணுகு முறைகளை தவிர்த்து, ஜீஷெக்கின் படைப்புக்கள் ஒரு அசாதாரணமான உள்பார்வையுடன் விசாலமான பாராட்டுதலை ஊடக தளத்தின் உள்ளடகத்திற்கும் வடிவங்களுக்கும் கொடுக்கும் அளவில் தகவலைப் பெருகின்றன. கருத்தளவு கோட்பாட்டிலிருக்கும் அவரது ஆர்வத்தை தவிர்த்து, மேல் சொன்ன பாராட்டு அவரை ஏகலின் முரண்பட்ட கருத்தாக்கமான ’’ஆன்மாதான் எலும்பு’’ என்பதன் ஒரு பிரமிப்பு

ஊட்டக்கூடிய வறையாலராக ஆக்குகிறது. புரிதலுக்கு சிக்கலான தத்துவம், சராசரி வாழ்க்கை மற்றும் ஊடகத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட உதாரணங்களை வெகு எளிதாக கையாள்வதில் அவருக்கு இருக்கும் பரிச்சயம், வெகுஜன பண்பாட்டை வெளிப்படையாகவும் அறிவு சார்ந்த விமர்சனம் தவிர்த்தும் கொண்டாடும் மற்ற பண்பாட்டு கோட்பாட்டாளர்களுக்கு அன்னியமானது. எனவே அவர் சி. ரைட் மீல்ஸ் மோசமானதாக விவரித்த சமகால பண்பாட்டு அணுகு முறைகள் சார்ந்த ''அனுபவ அறிவு கருத்தாக்கத்தை'' விலக்குகிறார். அவரது செயல்பாடு யுத்தி எப்பொழுதும் அவரது வாசகர்களை ஒருவித குறைக்க முடியாத அளவிலான மேல்தட்டு கோட்பாட்டிற்கும் சாதாரண நிகழ்வுகளின் பல்வேறு பரிணாமங்களுக்கும் உள்ள உறவை எதிர்கொள்ளவைக்கிறது.

வியக்க வைக்கும் அளவில் வெகுஜன பண்பாட்டு தளத்திலிருந்தும், இலக்கிய மரபுகளிலிருந்தும் விடயங்களை ஜீஷெக் தருவிக்கிறார். அவற்றை கொண்டு புதுமையாக கிராக்கோர் சொன்னபடி 'புரிதலுக்கு எதிரான வேலை நிறுத்தம்' நிகழ்த்தும் பல்வேறு சமூக காட்சிகளையும் நவீன ஊடகங்களின் மூலமாக அவை உருவாக்கும் திரும்பத்திரும்ப சொல்லப்படும் அர்த்தங்களையும் எதிர்கொள்வது ஜீஷெக்கின் மிகவும் கவர்ச்சிகரமான குணாதிசயம் ஆகும், ஆதிக்க சமூக வடிவங்களின் ஒருமுக அடையாளங்களுக்கு எதிராக இயங்கிய அறிவார்ந்த சிந்தனையாளர்களின் பாரம்பரியத்தில் ஜீஷெக்கிற்கு பங்கு உண்டு. அவரது புதுமையான குணம் அவர் எவ்வாறு சாதுரியத்துடனும் கற்பனையுடனும் உறவுகளையும் சார்புகளையும் உத்வேகத்துடன் எதிர்பார்க்கிறார் என்பதிலிருக்கிறது. மற்ற கல்வியாளர்கள் வெகுஜன பண்பாட்டு தளத்தை விடுதலை தருவதாக பிரதானபடுத்த நினைக்கும் வேளையில் (உதாரணத்திற்கு, சுரண்டல்தனமான *The Swan போன்ற* உருமாற்றும் அறுவை சிகிச்சை நிகழ்ச்சிகளை மார்க் போஸ்டர் ∴புக்கோவின் கருத்தாக்கமான *சுயத்தை பேணுவது* என்பதன் மேம்பட்ட உதாரணமாக சுட்டிக் காட்டுவது[1]). ஜீஷேக் அத்தகைய போக்கைத் தவிர்த்து அவர்களால் அணுக முடியாத விடயங்களையும் அணுகுகிறார். ஜீஷெக்கை ஒரு உன்னதமான அறிவார்ந்த கோட்பாட்டாளராக அடையாளம் காட்டுவது அவர் எவ்வாறு அடார்னோவின் மேல்தட்டு பார்வையை குற்றம்சாட்டும் வகையில் திரும்பத்திரும்ப சொல்லப்படும் சோம்பல்தனமான விடயங்களை ஒதுக்கிவிட்டு வெகுஜன பண்பாட்டை பற்றிய ஒரு தீவிரமான உள்சார்ந்த அணுகுமுறையை அடிப்படை உணர்ந்தும் மோசமான செயல் சார்ந்தும் உருவாக்குகிறார் என்பதை பொருத்து அமைகிறது.

லாக்லா ஜீஷேக்கின் *The Sublime Object of Ideologyஇன் முன்னுரையில் குறிப்பிடுவது:*

> …இது கோட்பாட்டு மொழிகளுக்கும் அன்றாட வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் தடுப்பை உடைக்க ஒரு மறைமுகமான அழைப்பை கொண்டுள்ளது. சமகாலத்திய பெருமொழி பற்றிய விமர்சனம் எல்லைகளை தாண்டுவதற்கான வழியை ஏற்படுத்தினாலும், ஜீஷெக்கின் புத்தகம் (அதன் தாவும் தன்மையினால்-திரைப்படங்களிருந்து

தத்துவத்திற்கும், இலக்கியத்திலிருந்து அரசியலுக்கும்) ஒரு செம்மையான தன்மையை இந்த அளவில் கொண்டுள்ளது. 'அதீத நிலைமாறும்' குணாதிசியத்தை தங்களது கோட்பாடுகளுக்கு கொடுப்பவர்களாலும் அல்லது 'தனி குறிப்பு ஆராய்ச்சிகள்' சார்ந்த புராண உலகத்தைச் சார்ந்து இருக்கும் நபர்களாலோ இந்த புத்தகத்தை சௌகரியமாக வாசிக்க முடியாது.( ஜீஷெக் 1989:xiii)

அடிக்கடி அவரால் சொல்லப்படும் கூர்மையான உதாரணங்கள் (அவரது விவாதத்திற்குரிய அனுமானமான கோகோ இனிப்புதான் அஜீரணத்திற்கு காரணம்), எதிர்பார்த்த விளைவை கொண்டிராவிட்டாலும் அவரது உண்மையான நோக்கம் ஆதிக்க பார்வைகளை புதுமையான பங்களிப்புடன் எதிர்கொள்ளும் பாராட்டுதலுக்குறிய கடப்பாட்டிலிருந்து விலகி செல்வதில்லை. உதாரணத்திற்கு, *நிலை குலைந்து நிற்பது* பற்றிய அவரது ஆதரவான வாதத்தையும், *தொடர்நிலை பார்வை சிக்கலை* கையகப்படுத்துவதின் முக்கியத்துவத்தையும் கூறலாம். அவரது அடையாளமின்மை அறிவார்ந்த சிந்தனையை துாண்டுவது:

…உண்மைக்கான அமைப்பு புனைக் கதைக்கான அமைப்பு என்ற லக்கானிய கோட்பாடு: அந்த குழப்பமான மாதங்களின் ஊடே முதலாளித்துவமாக உருமாறும் 'உண்மையில் இருக்கும் பொதுவுடமையை' பொருத்தவரை புனைக்கதையான 'மூன்றாவது வழிதான்' சமூக எதிர்நிலைத் தன்மை மறையாத தளமாகும். இங்குதான் பின்நவீனத்துவத்தை பற்றிய கொள்கை விமர்சனத்திற்கான வேலை இருக்கிறது: அமைப்பின் எதிர்நிலை குணாதிசியத்தை காட்டும் உட்கூறுகளை அடையாளப்படுத்துவது நம்மை நமது நிலையான அடையாளத்திலிருந்து அன்னியப்படுத்தும் விடயங்களிருந்து இருந்து தப்பிக்கத் தேவையான ஒன்று. (ஜீஷெக் 1994:7)

இப்பொழுது இல்லாத ஒன்றுக்கும், இப்பொழுது எது சாத்தியமில்லையோ அது பிற்காலத்தில் சாத்தியம் என்ற ஒன்றுக்குமான இந்த ஆராய்ச்சிமுறை கடப்பாட்டைதான் நாம் மற்ற 'பின்நவீனத்துவ' கோட்பாட்டாளர்களின் கொள்கைகளில் பார்க்கிறோம். (உதாரணமாக, பொதிர்லாவின் ஏகாதிபத்திய குறியீட்டு அமைப்பு பற்றிய அறிவார்ந்த விமர்சனமும் பாதியோவின் *நிகழ்வு* பற்றிய கருத்தாக்கமும்) *பஜீஆஇ* தொகுதி 1 இதழ் 1இல் ஆராயப்படுகிறது.

## தகுதியுள்ள மனிதர் - பொது அறிவுஜீவி ஜீஷெக்

… அதிகாரத்தை பிடித்த குழு கருத்தை கைவிடுவதில்லை. அது உண்மையில் கருத்தை அனாதையாக்கியிருந்தாலும் அது இன்னமும் யதார்த்த நிலையில் மிதந்து கொண்டுதான் இருக்கிறது. (உதாரணத்திற்கு, மறுமலர்ச்சி காலக்கட்டத்தில் கிருத்துவ மதத்தின் நிலமையை எண்ணிப் பார்க்கலாம்). தவறு செய்ய முடியாத உள்ளுணர்வு என்ன போதிக்கிறது என்றால் கருத்து என்பது ஒரு முக்கியமான நம்பக்கூடிய கூட்டாளி, எப்பொழுது என்றால், அதன்

> வாழ்வுரிமை கேள்விக்குறியாகும் பொழுது. எனவே அது ஒரு தைரியமான, கயிற்றின் மேல் நடக்க கூடிய அளவில், ஒரு இயங்கியலை பரிவர்த்தனை செய்கிறது. யதார்த்தில் உள்ள அதனுடைய எல்லா ஒப்புதல்களையும் கருத்திலிருந்து எடுத்துக்கொள்ள இது அவசியமாகிறது. இதனால் குழுதான் அதன் செயலாக்கத்திற்கு காரணம் என்பது நம்ப வைக்கப்படுகிறது. முன்பு அதனை உருவாக்கிய விடயமான இருத்தலின் உள்ளடக்கத்தோடு அதனுடைய உறவுகள் உண்மையில் மேல் எழுந்த வாரியாகத்தான் உள்ளது. கருத்து என்பது இங்கே அலங்காரமாகி விட்டது. கருத்து என்பது இங்கு ஒரு மிகையான ஆடம்பர முகப்பாக, அழுகிய உள்பகுதியை பிரதிநிதிக்கும் வேளையில், அது உருவாக்கும் ஒற்றுமை நல்ல எண்ணத்தை கேலி செய்வது போல் உள்ளது. (கிராக்கோர் 1995[1922]:167)

ஜீஷெக் வெகு தீவிரமாக இன்றைய அறிவுசார் சூழ்நிலையில் நிலைப்பதன் முக்கியமான காரணம் அவர் எவ்வாறு ஒரு பொது அறிவுஜீவிக்கான குணாதிசியங்களை பெற்றுள்ளார் என்பதிலும், பொது தளத்தின் சூழல்கள் மற்றும் பெரிதும் வெளி உலகத் தொடர்பில்லாத பல்கலைக் கழகங்கள் கொண்டு வரும் அழுத்தங்களுடனும் சமரசம் செய்து கொள்வதில்லை என்பதிலும் உள்ளது. கிராக்கோரின் ‘அழுகிய உள்பகுதியை’ மறைக்கும் ‘ஆடம்பர முகப்பு’ மற்றும் ‘நல்ல எண்ணத்தை கேலி செய்வது’ என்பது நேரிடையாக பல்கலைக் கழகங்களில் உள்ள அதிகார அமைப்பும் சரியில்லாத ஊடக விவாத இலக்கணங்களின் தற்காலத்திய சேர்க்கையாகும். அது கிராக்கோரின் ‘நல்ல துணையாக’ கருவிசார் சிந்தனையை வலுப்படுத்துவதிலும், உண்மையான அறிவுசார் விசாரனையை மழுங்கடிப்பதிலும் பங்கு வகிக்கிறது. ஊடகமயமான பொது தளத்தின் தீவிர சிந்தனையில் ஆர்வமுள்ளவர்கள் அதனை அறிவு சாராத, சுயபோற்றுதலில் மிகவும் தோய்ந்த, ஒருவரை ஒருவர் பின்னால் குத்திக் கொள்ளும் ஊடக கூட்டத்தினரின் ஆதிக்கமில்லாத இடைத் தளங்களில் தான் தேடமுடியும். இந்த ஊடக கூட்டத்தினர் ‘எதாவது வித்தியாசமான விடயத்தில் நம்பிக்கை வைத்தால், அவர்கள் இருக்கும் இடங்களில் இருக்கமாட்டார்கள்’ (எட்வர்ட்ஸ் மற்றும் கிராம்வெல் 2003:90) என்பதையும் மீறி அவர்களது தொழில் துறை மற்றும் அறிவுஜீவித்தனம் சார்ந்த ஒழுங்கில் இன்னும் பெருமை கொள்கிறார்கள். இதனிடையில், நாம் அதிகம் பேசாதது ஆனால் கூர்ந்து கவனிப்பது என்னவென்றால் தற்போதைய மிகையான மேலாண்மைக்கு உள்ளான பல்கலைக் கழக அமைப்பு என்பது அறிவுத் தேடலுக்காகத்தான் என்பதற்கான வாதத்திற்குதான் உள்ளதே தவிர அது அதனின் அடிப்படை கல்விசார் முறையாக அல்ல. உண்மையிலேயே தேடலில் நாட்டம் கொண்ட அறிவுஜீவிகள் போர்ஜியோவின் காலத்தில் கத்தோலிக்கர்கள் இருந்த நிலையில் இருக்கிறார்கள். எவ்வாறு என்றால், போப்பாண்டவரின் ஆட்சியின் உச்சக்கட்ட இன்பத்திற்கு நடுவில், கடவுளுக்கு வந்தனம் சொல்ல முடியாமல்.

முன்னாள் யுகோஸ்லோவியா நாட்டின் கம்யுனிச அதிகார அமைப்புடன் இருந்த அனுபவங்களையும் மற்ற ஆராய்ச்சியாளர்கள் பொறாமைபடக்கூடிய அளவில் மிகவும் வெற்றிகரமாக உருவாக்கிய ஆராய்ச்சி தளத்தையும் பெற்ற ஜீஷெக் மற்றவர்களை தூண்டக்கூடிய அளவில் இருப்பதற்கு காரணம் அறிவார்ந்த சிந்தனை எதிர்கொள்ளும் இடர்களை அவர் மிகவும் இலேசுபடுத்தும் முறைதான். நாம் ஏற்கனவே சொல்லிய அவரது நகைச்சுவைத் தன்மையின்படி, ஜீஷெக்கின் படைப்புகள் ஒரு அறிவிஜீவித்தனமான வெட்கமற்ற தன்னம்பிக்கையையும், உயிர்ப்புத் தன்மையையும், கோட்பாட்டு சிக்கலுடன் கலந்து தரும் வரவேற்புக்குறிய விஷமுறிவு மருந்தாக இருக்கிறது. இது எதற்கு எதிரானது என்றால், ஊடகங்களின் அறிவிஜீவித்தனம் சார்ந்த குறைபாடுகளுக்கும், முன் தீர்மானிக்கப்பட்ட இலக்கணங்களுக்கும் மற்றும் 'ஹோமரை கணக்கு இருப்பு சீட்டுகளாகவும், கணக்கு இருப்பு சீட்டுகளை ஹோமராகவும்' காட்டும் ஆராய்ச்சியாளர்களின் தொடர்பியல் தோல்விகளுக்கும் எதிரானது. (டேவிஸ் 1996:23) ''தைரியமான கயிற்றில் நடப்பது போன்ற இயங்கியல்'' என்பது ஏகல், மார்க்ஸ் மற்றும் லக்கான் பற்றி ஜீஷெக் உருவாக்கும் உயிர்ப்புத் தன்மையுடைய கலவையின் எதிராக்க சுருக்கமாகும். மேலும் அது ஊடகங்களுக்கும் ஆராய்ச்சித் தளத்திற்கும் இடையே இருக்கும் இடைவெளியில் பயணிக்க அவருக்கு இருக்கும் விருப்பத்தையும் காட்டுகிறது. ஆராய்ச்சித் தளத்தின் குருட்டுத் தனத்திற்கும் வாடிப்போகும் ஊடகப் பரப்புரைக்கும் இடையே பயணிக்கும் ஜீஷெக் ஞாபகமூட்டுவது என்னவெனில், தீவிர கோட்பாட்டு கருத்தாக்கத்தின் மூலம் கிராக்கோரின் 'ஆடம்பர முகப்பை' மேம்போக்காக ஏற்றுக்கொள்ளும் போக்கை இன்னமும் பலமற்றதாக ஆக்கலாம்.

### சமூகவியலும் ஜீஷெக்கும் - வக்கிரத்தின் உண்மையான நிலை


இந்த முதல் இதழில் ஆசிரிய குழுவினர் அவரவர் துறை சார்ந்த பார்வையில் ஜீஷெக்கை அணுகுகிறார்கள். ஒரு அபாயகரமான ஊடக சூழலை (இது அமெரிக்க ஜனாதிபதி பிளாஸ்டிக் வான்கோழியை ஈராக்கிலுள்ள அமெரிக்க துருப்புக்களின் சாப்பாட்டு அறைக்குள் கொண்டு செல்வதையும், *Top Gun* படத்தை பொறாமைக்கு உள்ளாக்கும் அளவில் விமானம் தாங்கிய கப்பலில் புகைப்பட அழகியமுடன் பரிணமிக்கும் காட்சிகள் கொண்டது) புரிந்து கொள்வதற்கும் அடிக்கடி சிரமப்படும் சமூகவியல் துறைகள் ஜீஷெக்கின் எதிர்பார்ப்புகளிருந்து பெற வேண்டியது அதிகம். பெரும்பாலான ஊடக ஆராய்ச்சிகள் இப்படிப்பட்ட விடயங்களை கண்டு கொள்வதில்லை அல்லது பொருத்தமற்ற ஆராய்ச்சி முறைகளை கொண்டு இவற்றை எதிர்கொள்கின்றன. இந்த வளைந்து கொடுக்க முடியாத அணுகுமுறை ஊடக சூழலில் பரவியுள்ள ரேமோ வில்லியம்ஸ் விவரித்த 'உணர்ச்சியின் அமைப்பு' என்ற விடயத்தின் சிக்கலான நுனுக்கங்களை அணுகுவதில் தோல்வியடைகிறது. உதாரணத்திற்கு, திடமாகிக் கொண்டிருக்கும் கோழியின் கழுத்துப்பகுதி போல இருக்கும் ஜனாதிபதியின் உண்மையான நிலையை உள்ளடக்க ஆய்வு முறையும் அல்லது மிகவும் நேர்த்தியாக செயலாக்கப்பட்ட கேள்வி அட்டவணையும் எந்த அளவு வெளிக்கொணர முடியும். அடிக்கடி ஜீஷெக் சாணம் போன்று

தன்னை வெளிப்படுத்தி கொண்டாலும், *The Pervert's Guide to Cinema* என்ற மூன்று பகுதி கொண்ட *U.K* தொலைக்காட்சி தொடரை கொடுத்திருந்தாலும்; ஜீஷெக்கின் படைப்பின் முக்கியமான குணாதிசியம் என்னவென்றால், லக்கானிய அணுகுமுறையை பயன்படுத்தி விதிகளுடனும் நெறிகளுடனும் உள்ள மிகையான ஐக்கியமாதலை வக்கிரத்தின் உண்மை நிலையாக புலப்படுத்துவது (குறியீட்டு அளவிலான நம்மிலிருந்து வேறுபட்ட பெரிய மற்றையது). எனவே அவரது படைப்புக்கள் வெகுஜன பண்பாட்டின் கருத்தியல் செயலாக்கம் பற்றிய ஒரு புதிய பரிணாம புரிதலை நமக்கு தருகிறது. நடுநிலையுடன் இயங்குவதாகக் கருதப்படும் சமூகவியல் ஆராய்ச்சி தளம் உண்மையில் வக்கிரமான முக்கியத்துவத்தை ஆராய்ச்சி வழிகளுக்கு மட்டும் தந்து பிரதானமான அறிவுஜீவித்தனமான முடிவுகளுக்கு தருவதில்லை (இது எப்படி என்றால் சாலையின் இருட்டான பகுதியில் நாம் தொலைத்த சாவியை சாலை விளக்கின் கீழ் தேடுவதற்கு ஒப்பாகும்). இத்தகைய போக்கை எப்பொழுதும் அவர் குன்றாத ஆர்வத்துடன் புதுமையாக யுகித்து நமக்கு தெளிவுபடுத்துகிறார்.

வெளிப்படையான மற்றும் மறைக்கப்பட்டுள்ள நடப்பாக கருத்தியலைப் பார்க்கும் ஜீஷெக்கின் ஆய்வு, சமகாலத்திய ஆய்வு ஊடக சூழலின் முரண்பாடான உருவாக்கமான *புரிதலற்ற வெளிப்படைத் தன்மை* பற்றி ஒரு புதிய கோணத்தை தருகிறது. அது கிராக்கோரின் ஆரம்பகால கருத்திற்கும் ஒரு புதிய பரிணாமத்தை தருகிறது. ''எதை மக்கள் உணர காட்சி இதழ்கள் தடுக்கின்றனவோ அதுதான் காட்சி இதழ்களில் மக்கள் பார்க்கும் உலகம் …இதற்கு முன்பு எந்தக் காலக்கட்டமும் தன்னைப் பற்றி இவ்வளவு குறைவாக அறிந்திருக்கவில்லை, காட்சி இதழ்கள் புரிதலுக்கு எதிரான வேலை நிறுத்தத்தை அமைப்பதில் சக்தி வாய்ந்த காரணியாகும். (கிராக்கோர் 1995 [1927]:58) கீழ்வரும் உயிர்ப்புள்ள உதாரணத்தில், காட்சி இதழ்களின் முக்கியமான பங்கு குறித்தும், பரவலான சமூக போக்கை பற்றிய அவற்றின் சொல் உருவாக்கத்தையும் எடுத்துக்காட்டாக பார்க்கலாம். அச்சுறுத்தும் வகையில், மெய்மை குறியீட்டுத்தனமாக மாறும் விடயத்தை ஊடகங்கள் எவ்வாறு அணுகுகின்றன என்பதையும் இதில் பார்க்கலாம். அபு கேரிப் சிறையிலிருந்து வெளிவந்த கீழே கொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தும் காட்சிகளை வாசகர்கள் இன்னும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

அமெரிக்க வெகுஜன ஊடகங்களில், இதற்கு எதிரான பொது மக்களின் அதிருப்தி வெகு சீக்கிரமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நகைச்சுவையாக, ''கேலிகளாக'', டேவிட் லெட்டர்மேனின் *Late Show*வில் சில வாரங்களுக்கு பிறகு உலா வருகிறது[2]. ஒழுக்கம் சார்ந்த பெரும்பான்மையின் ஊடகப்படுத்தப்பட்ட மறுப்பும் அதன் நடைமுறையும் செப்டம்பர் 2006இல் அதன் மோசமான கட்டத்தை அடைகிறது. *Vogue* இதழில் இத்தாலியப் பதிப்பிற்காக எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சீருடை அணிந்த ஆண்கள் பெண்களை உடல் ரீதியாக வன்செயலுக்கு ஆளாக்கி





கட்டுப்படுத்தும் காட்சிகளில்தான் இந்த மோசமான நிலை எட்டப்படுகிறது. ஜீஷெக் இந்த அத்துமீறும் வகையிலான 'புரிதலுக்கு எதிரான வேலை நிறுத்தத்தை' நேரிடையாகவும் புதுமையாகவும் எதிர்கொள்கிறார். எட்கர் அலன் போவின் *The Purloined Letter*இல் வரும் காட்சியைப் போல (ஜீஷெக் மற்றும் லக்கான் அவர்களது படைப்புக்களில் சொல்வதைப் போல) சமூகத்தில் உள்ள முரண்பாடான நிலை என்னவென்றால் அதிகப்படியான வெளிப்படைத் தன்மையினால்தான் நமது புரிதல் பாதிக்கப்படுகிறது. ஜீஷெக் எப்பொழுதும் தருவது இது பற்றிய செறிவுள்ள கருத்துக்களைத்தான். லக்கானின் உளவியல் பகுப்பாய்வு வரையறையை ஜீஷெக் பயன்படுத்தும் முறை நமக்குத் தரும் பார்வை ஊடக சூழலில் நமது நிசமான வாழ்வு அனுபவங்கள் பற்றியது. குறைபாடுகள் கொண்ட செயல்முறை ஆராய்ச்சி முறைகள் மூலம் இத்தகைய பார்வை சாத்திய மில்லை.

ஆபாசம் மிஞ்சியிருக்கும், ஊடகங்களால் வழி நடத்தப்படும் சமுதாயத்தை (மேலே உள்ள புகைப்படங்கள் சுட்டிக்காட்டுவது போல), அறிவார்ந்த முறையில் புரிந்து கொள்ள நினைப்பவர்களுக்கு ஜீஷெக் ஒரு மதிப்பிட முடியாத வழிகாட்டியாக இருக்கிறார். பொதிர்லாவின் சிறு கோட்டால் இணைக்கப்பட்ட *ob-scene* என்ற கருத்தாக்கம் ஒழுங்காக மேடைக்கு வெளியே நடக்கும் பண்பாட்டு வளர்ச்சியை குறிப்பிடுகிறது. பார்வையாளருக்கும் நிகழ்த்தப்படும் விடயத்திற்கும் இடையே இருக்கும் பழமையான இடைவெளி தகர்க்கப்படுவதைதான் இந்த ஆபாசம்

விவரிக்கிறது. பல்வேறு விதமான நாடகமேடை வாயில்களை கொண்ட பண்பாடு தற்பொழுது எதனால் இடம் பெயர்ந்துள்ளது என்றால்:'அனைத்தும் தயாரிக்கப்படவேண்டும், அனைத்தும் தெளிவாக இருக்க வேண்டும், அனைத்தும் யதார்த்தமாகவும், பார்வையில்படும்படியும், கட்டுப்பட்டும், ஆபாச படக்காட்சியில் பாலினம் எவ்வாறு இருக்கிறதோ அப்படி இருக்கவேண்டும். ஆனால், பொதுவாக, இது நமது பண்பாட்டின் செயலாக்கம்தான். அதன் இயற்கைத் தன்மை ஆபாசமானது: அதன் பண்பாடு அரக்கத்தனமானது, செய்முறை சார்ந்தது மற்றும் அரக்கத்தன மான தயாரிப்புத் தளமாகவும் உள்ளது.' (பொதிர்லா 1990 [1979]:34-35) மேல் சொன்ன தீவிரமான வெளிப்படைத் தன்மையை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, ஜீஷெக்கின் கவனமாக உருவாக்கப்பட்ட வழியான *நிலை குலைந்து நிற்பது, தொடர்நிலை பார்வை சிக்கலை* உருவாக்கி அறிவார்ந்த சிந்தனைக்கு மிகவும் தேவையான ஒரு வெளியை தருகிறது. கோட்பாட்டால் விளைந்த இந்த தூரத்தை வைத்துக் கொண்டு அவர் பண்முகத் தன்மை கொண்ட ஊடகங்களால் வழி நடத்தப்படும் உலகத்தை விளக்குகிறார் - அவரது கவர்ச்சியுட்டும் பொழுது போக்குத்தனமான கதை சொல்லும் திறமை *மூலம்,* அதைத் தவிர்த்து அல்ல. முரண்பாடாக, ஜீஷெக் அவரது உதாரணங்கள் மூலம் (பெரும்பாலும் அவை அவரது கதைகள் தான்) எவ்வாறு தனது தத்துவம் கதையாக மாறுவதை தடுப்பதில் வெற்றி பெறுகிறார்' என்று ∴பாலார் *பஜீஆஇ* தொகுதி 1 இதழ் 1இல் ஒரு அறிவார்ந்த குறிப்பைத் தருகிறார்.

> இந்த உதாரணம் ஒரு கோட்பாட்டுக் கருவியாக அந்தஸ்தை பெறுகிறது: இதுதான் ஜீஷெக்கின் கோட்பாட்டை மற்ற சமகால ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட முயற்சிகளிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. அவை அவற்றின் யதார்த்த சூழல்களுக்கு மிக அருகாமையில் இருந்தாலும். பண்பாட்டு ஆய்வியல் இன்று அதன் பருப்பொருளுக்கும் அதற்கும் உள்ள தூரத்தை பெற்றிருக்கவில்லை. அவை விவரிக்கும் பண்பாடு அல்லது சார்பண்பாடு யதார்த்தத்தில் மூழ்கி இருக்கும் போது மிகவும் நிறைவான உணர்வைப் பெறுகின்றன. மாறாக, ஜீஷெக் எப்பொழுதும் அவர் கையாளும் கூறுகளின் உள்ளே நுழைவது இல்லை. அவர் கோட்பாட்டுக் கருவிகளாக பயன்படுத்தும் உதாரணங்கள் அவருக்கும் அவர் கையாள நினைக்கும் சுயபுரிதலுக்கும் இடையே தேவையான தூரத்தை தருகிறது. (∴பாலார் *பஜீஆஇ* தொகுதி 1 இதழ் 1:44)

ஜீஷெக்கின் அணுகு முறையை ∴பாலார் எவ்வாறு பார்க்கிறார் என்றால், 'மோசமான விடயங்களை கூர்மையான கருவிகளாக' பயன்படுத்துவதன் மூலம், அல்துாசரின் பருப்பொருள் பற்றிய "தங்க விதி" சொல்லுவதை அது செய்கிறது:"கொடுக்கப்பட்ட யதார்தத்தை அதன் சுய புரிதல் கொண்டு தீர்மானிக்கக் கூடாது." பெரும்பாலான அறிவுசாரா சிந்தனை யாளர்களுடன் ஒப்பிடும் பொழுது, ஜீஷெக் எப்பொழுதும் அவரது உதாரணங்களின் ஆராய்ச்சி முறை தகுதியை உணர்ந்து இருப்பதினால், அவர் மேலெழுந்தவாரியான தூண்டல்களின் கவர்ச்சியை ஒதுக்குகிறார்.

## முடிவுரை

> *சமூகத்திற்கு செழுமையான கருத்து தனிநபர்களால் உருவாக்கப்பட்டு உலகத்திற்கு தரப்படுகிறது என்றாலும், அதன் உடல் தன்மை குழுவினால்தான் உருவாக்கப்படுகிறது. தனிநபர் கருத்தை உருவாக்கி பிரகடனம் செய்தாலும், அவை குழுவினரால்தான் உள்வாங்கப்பட்டு செயலாக்கம் பெருகிறது.* (கிராக்கோர் 1995 [1922]:143-144)

> *எப்பொழுதெல்லாம் ஒரு முக்கியமான நபரால் உருவாக்கப்பட்ட கருத்து ஒரு குழுவாக இடம் பெறுகிறதோ, அந்த நபர் சார்ந்த மிகவும் சிறப்பான தனித்துவம் அந்த மாற்றத்தில் மறைந்து விடுகிறது. அந்த கருத்துக்கும் பல்வேறுபட்ட தளங்களில் அது வேறூண்றிய அனுபவங்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் அறுக்கப்படுகிறது, அது இன்னமும் அந்த தனி நபரால் கட்டுப்படுத்தப்பட்டாலும். வாக்னருக்கு அவரை பின்பற்றியவர்களின் மேல் இருந்த வெறுப்பும், மார்க்ஸ் தான் ஒரு மார்க்ஸியவாதி இல்லை என்று சொன்னதும் மாதிரியான உதாரணங்களைத் தவிர வேறு எதுவும் இவ்வகையான மாற்றத்தை இத்தகைய செயலாக்கத்தில் கருத்து எதிர் கொள்வதை தெளிவாக சுட்டிக்காட்ட முடியாது.*

சிக்பிரட் கிராக்கோரின் கட்டுரையான *The Group as Bearer of Ideas*இல் இருந்து எடுக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட மேற்கோள்களில் நாம் ஒரு இதழை உயிருடன் உள்ள ஒருவருக்கு (அவர் ஜீஷெக் சிந்தனையை கடைபிடிப்பவர் அல்ல என்ற உத்தரவாதத்தையும் உலகத்திற்கு சொல்லி கொண்டு) காணிக்கையாக்குவதில் உள்ள வாய்ப்புக்களையும் ஆபத்துக்களையும் பார்க்கலாம். ஜீஷெக்கின் நகல் எடுக்கமுடியாத ஆளுமைக்கு முழு நியாயம் கற்பிப்பதில் உள்ள சவால்களை *பஜீஆஇ* உணர்ந்துள்ளது. ஆனால், இந்த ஆபத்தை எதிர் கொள்வது ஜீஷெக்கின் படைப்புக்கள் வளர்ந்த கல்விசார் துறைகளுக்கு முன்வைக்கும் சவால்களை வளர்ப்பதற்கு உதவும் என்று கருதுகிறது. கிராக்கோர் சிறப்பான தனித்துவம் குழுவின் மாறும் மொழிபெயர்ப்பில் மறையும் என்று சொன்ன எச்சரிக்கையை பாராட்டினாலும், இந்த இதழ் ஒரு நிலையான கவனத்தை அவரது படைப்புக்கு தரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, யுத-கிருத்துவ அறிவார்ந்த மரபில் மிகவும் பற்றுள்ளவர் ஜீஷெக். இருந்தாலும், புத்தர் சொன்ன வாசகத்தை இங்கே சுட்டிக்காட்டலாம்: ’’ஒரு விரல் நிலாவை சுட்டிக்காட்டும் பொழுது, மூடன் விரலை பார்க்கிறான்.’’ எது மக்களை ஜீஷெக்கின் படைப்பின்பால் ஈர்க்கிறது என்றால், அவரது கோட்பாட்டு முயற்சிகளின் மூலம் நிலாவைப் பார்க்காமல் விரலைப் பார்க்கும் வக்கிரத்தனமான ஆராய்ச்சியாளர்களை அறிவார்ந்த விசாரனைக்கு அவர் தளராமல் உட்படுத்தும் பாங்குதான்.

**தமிழ் தட்டச்சு உதவி: முத்தையா கோபால், முதுகலை மாணவர், மக்கள் ஊடகவியல் மற்றும் தொடர்பியல் துறை, சென்னை பல்கலைக்கழகம்.**

**Endnotes**:

1. Mark Poster Swan's Way: *Care of the Self in the Hyperreal* -Keynote presentation at the Engaging Baudrillard Conference, University of Swansea, UK, September 4th-6th, 2006.

2. For a fuller discussion of the Abu Ghraib images see (Taylor 2007) http://www.ubishops.ca/BaudrillardStudies/vol4_1/taylor.htm , "The Pornographic Barbarism of the Self-Reflecting Sign."

**References**:


Baudrillard, J. (1990) [1979]. *Seduction*, London: MacMillan.

Davies, M. L. (1996), 'University culture or intellectual culture' in B. Brecher, O. Fleischmann and J.Halliday (eds.) *The University in a Liberal State*, Aldershot: Avebury.

Edwards, D. and Cromwell, D. (2005). *Guardians of Power: The Myth of the Liberal Media*,London: Pluto.

Kracauer, S. (1995 [1922]). 'The Group as Bearer of Ideas' in The Mass Ornament: Weimar Essays, London: Harvard University Press.

Kracauer, S. (1995 [1927]). 'Photography' in *The Mass Ornament: Weimar Essays*, London:Harvard University Press.

Žižek, S. (1989). *The Sublime Object of Ideology*, London: Verso.

Žižek, S. [ed.] (1994) *Mapping Ideology*, London: Verso.

Žižek, S. (2004). *Iraq: The Borrowed Kettle*, London: Verso.

'Žižek on toilet design' -http://www.lrb.co.uk/v26/n17/print/zize01_.html , *The London Review of Books*.

'Žižek on stretching a concept' - http://www.lrb.co.uk/v26/n17/print/zize01_.html , *Critical Inquiry*.